# வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

| தரம் :06 | குடியியற்கல்வி | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | சுட்டெண் ..................................................................... | |

### பகுதி - I

❖ **பின்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1) பாடசாலையின் வரலாற்றை அறிய உதவும் மூலாதாரமாக அமைவது.
(I). இலவச பாடநூல்கள் (ii). தேர்தல் இடாப்பு
(iii). சம்பவத்திரட்டு புத்தகம் (iv). பிறப்புச் சான்றிதழ்

2) பாடசாலையின் தலைவராக விளங்குபவர்.
(I). மாணவ தலைவர் (ii). ஆசிரியர் (iii). நூலகர் (iv). அதிபர்

3) உங்களிடம் காணப்படும் நற்பண்புகள் ஒன்றாக அமைவது.
(I). பொறுமை (ii). கோபம் (iii). சுயநலம் (iv). பொய் சொல்லுதல்

4) இலங்கையில் காணப்படும் மாவட்டங்களின் எண்ணிக்கை.
(I). 22 (ii). 25 (iii). 21 (iv). 20

5) கௌரவமான மொழியைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் நன்மைகளுளொன்றாக அமைவது.
(I). நண்பர்கள் குறைதல் (ii). சமூகத்தில் கௌரவம் கிடைத்தல்
(iii). நல்லவர்களின் உறவு முறிதல் (iv). சமூகத்தால் புறக்கணிக்கப்படுதல்

❖ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கீறிட்ட இடம் நிரப்புக.**
(பிறப்புச் சான்றிதழ், பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், கலாநிதி C.W.W. கன்னங்கர, சூரியஒளி, வைத்தியசாலை)

1) எல்லாப் பிரதேசங்களிலும் கிடைக்கக்கூடிய வளம் ................................................ ஆகும்.

2) உமது முழுப்பெயர் சரியானதென்பதை உறுதிப்படுத்த உதவும் ஆவணம்................................ ஆகும்.

3) பிரதேச மக்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக 24 மணிநேரமும் சேவை வழங்கும் பிரதான நிறுவனம் ....................................... ஆகும்.

4) இலவசக் கல்வியின் தந்தையாகப் போற்றப்படுபவர்................................................ ஆவார்.

5) ........................................... குடும்பத்தில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கமாகும்.

❖ **பின்வரும் வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

1) திட்டமிட்ட மாணவன் இலகுவாகச் சவால்களை வெற்றி கொள்வான். ( )

2) இல்ல விளையாட்டுப் போட்டியின் போது பாடசாலைக்கொடி ஏற்றப்படும். ( )

3) ஒற்றுமையாகச் செயற்படுவதால் நேரம் வீண்விரயமாகும் ( )

4) பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும். ( )

5) பாடசாலையிலிருந்து இடைவிலகுதல் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடாகும். ( )

(5 x2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

❖ **தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1) பொய்பேசுதல் | இயற்கைவளம் |
| 2) அரச ஒசுசல | பொதுச்சொத்து |
| 3) தவிசாளர் | பேராசிரியர் சேனகபிபிலே |
| 4) காற்று | பலவீனம் |
| 5) நூலகம் | பிரதேசசபை |

(5 x2 = 10 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01.** 1) பாடசாலையின் வரலாறு என்றால் என்ன?.
2) பாடசாலையின் வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்கள் 3 தருக.
3) பாடசாலையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நபர்கள் மூவரைக் குறிப்பிடுக.
4) பாடசாலை ஒழுங்கமைப்பினுள் இடம்பெறும் குழுக்கள் 3தருக.

(4 x3 = 12 புள்ளிகள்)

**02.** 1) மாணவர்களின் கடமைகள் 3 தருக.
2) உங்களிடம் காணப்படும் பலவீனங்கள் 3 தருக.
3) திட்டமிட்டுச் செயற்படுவதனால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக.
4) பாடசாலையின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் அடையாளங்கள் 3 தருக.

(4 x3 = 12 புள்ளிகள்)

**03.** 1) இலங்கையில் காணப்படும் மாகாணங்கள் 3 தருக.
2) இயற்கை வளங்கள் 3 தருக.
3) ஒற்றுமையாகச் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக.
4) இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்கள் எவை?

(4 x3 = 12 புள்ளிகள்)

**04.** 1) நிலம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 3 தருக.
2) பிரதேச மக்கள் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்கள் 3 தருக.
3) சமய வழிபாட்டுத் தலங்களால் ஆற்றப்படும் சேவைகள் 3 தருக.
4) உமது பிரதேசத்தில் காணப்படும் சங்கங்கள் / கழகங்கள் 3 தருக.

(4 x3 = 12 புள்ளிகள்)

**05.** 1) மரியாதைமிக்க உரையாடலின் பண்புகள் 3 தருக.
2) கௌரவமான மொழியைப் பயன்படுத்துவதன் நன்மைகள் 3 தருக.
3) பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் 3 தருக.
4) மின்சாரத்தைச் சிக்கனமாக பயன்படுத்தும் வழிகள் 3 தருக.

(4 x3 = 12 புள்ளிகள்)

**06.** 1) பொதுச்சொத்துக்கள் 3 தருக.
2) நீர் மாசடையும் வழிகள் 3 தருக.
3) சூழலை பாதுகாக்க மேற்கொள்ளக்கூடிய வழிகள் 3 தருக.
4) பொதுச்சொத்துக்களைப் பாதுகாக்கும் வழிகள் 2 தருக.

(4 x3 = 12 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page